தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.9.2024) முகாம் அலுவலகத்தில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.9.2024) முகாம் அலுவலகத்தில், பால்வளத் துறை அமைச்சர்.ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.9.2024) முகாம் அலுவலகத்தில், அமைச்சராக அறிவிக்கப்பட்டுள்ள .வி.செந்தில் பாலாஜி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளார்.

முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.9.2024) முகாம் அலுவலகத்தில், புதிய அமைச்சராக அறிவிக்கப்பட்டுள்ள ஆர்.இராஜேந்திரன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வ கணபதி , சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.9.2024) முகாம் அலுவலகத்தில், புதிய அமைச்சராக அறிவிக்கப்பட்டுள்ள முனைவர் கோவி.செழியன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் சு.கல்யாண சுந்தரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் மற்றும் கழக நிரிவாகிகள் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.9.2024) முகாம் அலுவலகத்தில், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளார்.

மீலாது நபித் திருநாளை முன்னிட்டு – செஞ்சி

பெரிய பள்ளிவாசலில் 2 ஆயிரம் பேருக்கு பொது விருந்து!

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, அக். 1- மீலாதுநபி பண்டிகை முன்னிட்டு செஞ்சி பெரிய பள்ளிவாசலில் 2000 பேருக்குபொது விருந்து வழங்கும் நிகழ்ச்சியை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சத்தர தெருவில் உள்ள பெரிய பள்ளிவாசலில் மீலாது நபி பண்டிகை முன்னிட்டு பொது விருந்து வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி வட்டஜமாத் தலைவர் எஸ். ஆர். சையத் மஜித் பாபு தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு 2000 பேருக்கு பொது விருந்து வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில்பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், கவுன்சிலர் நூர்ஜகான் ஜாபர், ஷமீம் அக்தர், அஸ்லம் ஷரீப், ஜே. எஸ் .சர்தார், சாமியுள்ளா, முபாரக், தொண்டரணி பாஷா, ரசூல், ஹாஜிரஆகியோர்கலந்து கொண்டனர்.காலையில் தொடங்கிய பொது விருந்து நிகழ்ச்சியில் அனைத்து தரப்பு பொது மக்கள் கலந்து கொண்டு அறுசுவை உணவு அருந்தினர்.

இந்தியாவிலேயே

வேலைக்குச் செல்லும் பெண்கள் அதிக சதவீதம் உள்ள மாநிலம் தமிழ்நாடு!

திருச்சியில் அருண் நேரு எம்.பி. பேச்சு!

திருச்சி அக். 1- இந்தியாவிலேயே வேலைக்கு செல்லும் பெண்கள் அதிக சதவிகிதம் உள்ள மாநிலம் தமிழகம் - தமிழகத்தில் தான் வேலை வாய்ப்பு அதிகமாக உள்ளது. அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு தெரிவித்தார்.

திருச்சி மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார் வேலை வாய்ப்பு முகாம் திருச்சி டி.வி.எஸ் டோல் கேட் அருகே உள்ள தனியார் கல்லூரியில் நேற்று நடைபெற்றது.

இதில் 150க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டன.

இந்த முகாமில் திருச்சி மாவட்டத்தை சேர்ந்த 18 முதல் 35 வயது உள்ள இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

இந்த முகாமில் கலந்து கொண்டு தேர்வு பெற்ற பணி நாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு ஆகியோர் வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து இந்த நிகழ்ச்சியில் பெரம்பலூர் நாடாளு மன்ற உறுப்பினர் அருண் நேரு பேசுகையில்,

மாணவர் பருவத்தில் இருந்து மிகவும் பொறுப்பான இடத்திற்கு செல்கிறீர்கள்.

ஆட்கள் வேலைக்கு தேவை என தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் பார்த்து இருப்பீர்கள் ஆனால் வட இந்தியாவில் இது போன்ற அறிவிப்பு காண முடியாது

தமிழ் நாட்டில் வேலை வாய்ப்பு அதிகமாக உள்ளது 10,000 பேருக்கான வேலைகள் உள்ளது ஆனால் 2000 பேர் தான் வேலைக்கு வருகிறார்கள்

எனவே வேலை வாய்ப்பு அதிகமாக உள்ளது ஆனால் ஆட்கள் குறைவாக உள்ளனர்

இந்திய அளவில் பெண்கள் வேலைக்குச் செல்வது 18 சதவீதம் ஆனால் தமிழகத்தில் 54 சதவீதம் பேர் வேலைக்கு செல்கின்றனர்.

வேலைக்கு செல்லும் பெண்கள் சதவீதம் இந்தியாவிலே தமிழகத்தில் தான் அதிகம் தமிழகத்தில் வேலை வாய்ப்பு அதிகமாக உள்ளது அனைவரும் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

வேலை என்பது நமது தொடக்கம் எனவே சம்பளம் , தொலை தூரம் என கூறாமல் வேலைக்கு செல்ல வேண்டும் இது உங்களுக்கு அனுபவத்தை தரும் இந்த அனுபவம் வேறு ஒரு நிறுவனத்திற்கு செல்ல உதவும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்வில் வேலை வாய்ப்பு துறை மண்டல இணை இயக்குனர் தேவேந்திரன், வருவாய் கோட்டாட்சியர் அருள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் மாசில் ஆஷா உள்ளிட்ட அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு துணை முதல்வராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதவி ஏற்றதை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம் தலைமையில் பெரியார்நகர், பெரியசேமூர் பகுதிகளில் பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார். நிகழ்வில் துணை மேயர் வி. செல்வராஜ் மண்டல தலைவர் சசிகுமார், விமல் (எ) நந்தகுமார், கே.சந்திரசேகர், சிராஜுதீன், குத்தூஸ் ஜியாபுதீன், இளமுருகன், ரேவதி திருநாவுக்கரசு, கோபால்சாமி, தொ.மு.ச. சுந்தர்ராஜ், சி.மணி, அன்பழகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தமிழ் மாநிலக் குழு வாழ்த்து!

மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் செய்தி!

சென்னை, அக்.1- புதிதாகப் பதவியேற்றுள்ள துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழு வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

"தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சி.பி.எம். மாநில செயற்குழு சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், தமிழக அமைச்சரவையில் புதிதாக இடம் பெற்றுள்ள அமைச்சர்கள் செந்தில் பாலாஜி, பனமரத்துப்பட்டி ராஜேந்திரன், கோவி. செழியன் ஆகியோருக்கு சி.பி.எம். சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா பயிற்சி பாசறை "என் உயிரினும் மேலான" என்ற தலைப்பில் மண்டல அளவிலான விழுப்புரம் தெற்கு, விழுப்புரம் வடக்கு, புதுச்சேரி, கள்ளக்குறிச்சி வடக்கு, தெற்கு, கடலூர் கிழக்கு , மேற்கு ஆகிய மாவட்ட பேச்சுப்போட்டி விக்கிரவாண்டி சூர்யா பொறியல் கல்லூரியில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்துகொண்டு பேச்சுப் போட்டியை துவக்கி வைத்தார். மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், நடுவர்களாக முன்னாள் அமைச்சர் பொன்.முத்துராமலிங்கம், மதுரை பாலா , சுகுணா திவாகர், டான் அசோக், சூர்யா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் ஆர் சிவா, டாக்டர் இரா இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், இளைஞரணி மாவட்ட அமைப்பாளர்கள் செ.தினகரன், ஆனந்த் கண்ணன் , தாகபிள்ளை, அருண்குமார், சம்பத் எம்.எல் .ஏ, கார்த்திக், கணேஷ் துணை அமைப்பாளர்கள் அன்பு, ராஜவேல், பாலாஜி, கலைவாணன், ஏ.சி.கே.பிரேம், தேவேந்திரன் உள்ளிட்ட பெருந்திரளாக மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அண்ணா சிலை அருகே திருச்செங்கோடு நகர தி.மு.க.வினர் சார்பில் உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வர் பதவியேற்றதினை கொண்டாடும் வகையில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தும், இனிப்புகள் வழங்கியும் மற்றும் பட்டாசுகள் வெடித்தும் ஆரவாரத்துடன் கொண்டாடினர். இந்நிகழ்வில் நகரச் செயலாளரும், நகர் மன்ற துணைத் தலைவருமான கார்த்திகேயன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன், நகர் மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு, வழக்கறிஞர் அணி தலைவர் சுரேஷ்பாபு, நெசவாளர் அணி அமைப்பாளர் சரவணன் முருகன் மற்றும் மாவட்ட, நகர கழக நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகள் உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்ட தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.